# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.A.** DEGREE EXAMINATION – **TAMIL**

THIRD SEMESTER – **APRIL 2024**

**UTL 3502 – RELIGIOUS AND ETHICAL LITERATURE**

Date: 17-04-2024 Dept. No. Max. : 100 Marks
Time: 01:00 PM - 04:00 PM

| | |
|---|---|
| | பகுதி – அ - **K1 (CO1)** |
| | **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க: (10 x 1 = 10)** |
| **1.** | **ஓரிரு சொற்களில் விடையளிக்க:** |
| அ) | தேவாரம் - பொருள் தருக. |
| ஆ) | பாலத்தீனம், செருசலேம் நாடுகளைப் பற்றிப் பேசும் காப்பியம் எது? |
| இ) | அறம் எனப்படுவது யாது? |
| ஈ) | நாலடியார் கூறும் அழகு எது? |
| உ) | மன்னனை விடக் கற்றோனே சிறப்புடையவன் எனக் கூறும் நூல் யாது? |
| **2.** | **கோடிட்ட இடத்தை நிரப்புக.** |
| அ) | திருமொழி பாடியவர் |
| ஆ) | மாணிக்கவாசகர் பாடிய நூல்கள்_____ |
| இ) | அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்ற குறிக்கோள் கொண்ட காப்பியம் _____ |
| ஈ) | பராபரக்கண்ணி பாடிய இசுலாமிய புலவர் _____. |
| உ) | பாரதியார் உடலினை __ செய்யச் சொல்கிறார் |
| | பகுதி – அ - **K2 (CO1)** |
| | **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க: (10 x 1 = 10)** |
| **3.** | **பொருத்துக:** |
| அ) | திருவருட்பா - இளங்கோவடிகள் |
| ஆ) | இரட்சணிய யாத்திரிகம் - நல்லாதனார் |
| இ) | சிலப்பதிகாரம் - ஔவையார் |
| ஈ) | திரிகடுகம் - எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை. |
| உ) | மூதுரை - அருட்பிரகாச வள்ளலார். |
| **4.** | **சரியா? தவறா?** |
| அ) | 63 நாயன்மார்கள் பாடியது நாலாயிர திவ்ய பிரபந்தம் என வழங்கப்படுகிறது |
| ஆ) | மணிமேகலை பௌத்த சமயத்தைச் சார்ந்த பெருங்காப்பியமாகும் |
| இ) | தேம்பாவணி மூன்று காண்டங்களும் 36 படலங்களும் உடையது. |
| ஈ) | இனியவை நாற்பதில் 124 இன்னாச் செயல்கள் கூறப்பட்டுள்ளன. |
| உ) | வாக்குண்டாம் என்பது மூதுரையைக் குறிக்கும். |
| | பகுதி – ஆ - **K3 (CO2)** |
| | எவையேனும் இரண்டு வினாக்களுக்கு 100 சொற்களில் விடையளிக்க: **(2 x 10 = 20)** |
| 5. | மாணிக்கவாசகர் பிடித்த பத்தில் உரைக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக. |
| 6. | இரட்சணிய யாத்திரிக விசிராந்தி படல நிகழ்வுகளை விவரிக்க. |
| 7. | பவத்திறமறுகெனப் பாவை நோற்ற காதையின் அறக்கருத்துகளைப் புலப்படுத்துக. |

| | |
|---|---|
| 8. | பெரியோரைப் பிழையாமை என்று நாலடியார் முன்மொழியும் கருத்துகளைத் தொகுத்துரைக்க. |
| **பகுதி – இ – K4 (CO3)** | |
| எவையேனும் இரண்டு வினாக்களுக்கு 100 சொற்களில் விடையளிக்க: **(2 x 10 = 20)** | |
| 9. | திருக்கழுமலத்தில் உள்ள சிவனின் சிறப்புகளை எடுத்துரைக்க. |
| 10. | குலசேகர ஆழ்வார் திருமொழியில் திருமால் எவ்வாறெல்லாம் புகழப்படுகிறார்? |
| 11. | குணங்குடி மசுதான் சாகிபு இறைவனிடம் முறையிடுவன யாவை? |
| 12. | மூதுரையில் ஔவையார் கூறும் வாழ்வியல் கருத்துகளை விவரிக்க. |
| **பகுதி – ஈ – K5 (CO4)** | |
| ஏதேனும் ஒரு வினாவிற்கு 250 சொற்களில் விடையளிக்க: **(1 x 20 = 20)** | |
| 13. | ‘இராமலிங்க வள்ளலாரும் அவரது நற்சிந்தனைகளும்’ எனும் தலைப்பினில் கட்டுரை எழுதுக. |
| 14. | இத்தாலி நாட்டின் சீரும் சிறப்பும் குறித்து தேம்பாவணி வழிநின்று விரித்துரைக்க. |
| | **பகுதி – உ K 6 (CO5)** |
| ஏதேனும் ஒரு வினாவிற்கு 250 சொற்களில் விடையளிக்க: **(1 x 20 = 20)** | |
| 15. | வரம் தரும் காதையில் வெளிப்படும் அறச் சிந்தனைகளைக் கட்டுரைக்க. |
| 16. | பாரதியாரின் புதிய ஆத்திசூடி பிற ஆத்திசூடி நூல்களில் இருந்து எங்ஙனம் வேறுபடுகிறது என்பதைத் தெளிவுறுத்துக. |

&&&&&&&&&&